| | 156 | பொருள்.29 ஜெயங்கொண்டம் நகராட்சியில் வாரச்சந்தைப் பகுதியில் அமைந்துள்ள நீர் உந்து நிலையம் நிலையத்தில் 5HP மோனோபிளாக் மோட்டார் மூலம் வார்டு எண்.9,4 மற்றும் 8 ஆகிய பகுதியிலுள்ள நீர்த்தேக்க தொட்டிகளுக்கும், 7.5HP மோனோபிளாக் மோட்டார் மூலம் வார்டு எண்.5,14,1618,19 மற்றும் 21 ஆகிய பகுதியிலுள்ள நீர்த்தேக்க தொட்டிகளுக்கும் மற்றும் 12.5HP மோனோபிளாக் மோட்டார் மூலம் வார்டு எண்.14மற்றும்10 ஆகிய பகுதியிலுள்ள பொது மக்களுக்கு மேற்கண்ட மூன்று மோட்டார்கள் மூலம் சுகாதார முறையில் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மூன்று மோட்டார்கள் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கூட்டு குடிநீர் திட்டம் செயலாற்றும் போது கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து பயன்படுத்தி வந்த நிலையில் மேற்கண்ட மூன்று மோடார்களின் உந்து திறன் குறைவாக உள்ளதால் நீர் உந்துவதற்கு நீண்ட நேரம் மோட்டார் இயக்க வேண்டியுள்ளது. எனவே, மின்சார தேவையும் அதிகமாகிறது.மேலும் பொது மக்களுக்கு வழங்க வேண்டிய சீரான குடிநீர் தடை ஏற்படுகிறது. எனவே, பொதுமக்களின் நலன் கருத்தில் கருத்தில் கொண்டு மேற்கண்ட 3 மோட்டார்கள் ஈடு செய்ய புதியதாக 5HP மோனோபிளாக் மோட்டார் – 1 எண்ணிக்கை மற்றும் தற்போது மக்கள் குடியிருப்புகள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும், மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் நேரம் அதிகமாக எடுத்துக்கொள்வதால் 7.5HP, 12.5HP - க்கு மாற்றாக 15HP மோனோபிளாக் மோட்டார்– 2 எண்ணிக்கை வாங்கி உபயோகிக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1.75 இலட்சத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**<u>ந.க.எண். 3750 / 2023 / இ1</u>** | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 157 | பொருள்.30 ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.19 பானாத் தெருவில் தற்போது வரை கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் வரப்பெறும் குடிநீர் மட்டுமே விநியோகம் செய்யப்படுகிறது. அப்பகுதியில் வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லை. மேலும், அவ்வப்போது குடிநீர் வடிகால் வாரிய பகிர்மான குழாய்கள் மற்றும் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் காரணத்தினாலும் நகராட்சிக்கு வழங்க வேண்டிய 1.50 MLD தினசரி கிடைக்க பெறுவது இல்லை. இதனால் பொது மக்களுக்கு வழங்க வேண்டிய குடிநீர் வழங்க முடியவில்லை. எனவே, பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக அப்பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைப்பதற்காக உத்தேச மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சம் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்ரவைக்கும், வரைவு ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**<u>ந.க.எண். 3586/ 2023 / இ1</u>** | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 158 | பொருள்.31 ஜெயங்கொண்டம் நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான தளவாட பொருட்கள் மற்றும் அத்தியவாசிய சாமான்களான, மிக்ஷி மற்றும் சமையல் செய்ய பயன்படுத்த தேவையான அலுமினிய பாத்திரங்கள், சில்வர் பாத்திரங்கள் போன்ற பொருட்கள் வாங்கி பயன்படுத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் | மன்றம் அனுமதி வழங்கலாம் |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**<u>ந.க.எண். 3318/ 2023 / இ1</u>** | |
| | 159 | பொருள்.32 ஜெயங்கொண்டம் நகராட்சியிலுள்ள **21** மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (OHT) மற்றும் தரைமட்ட தொட்டிகள் (Sump) ஆகியவற்றிற்கு Liquid குளோரினேஷன் இயந்திரம் பொருத்தி பொதுமக்களுக்கு தினசரி சுகாதாரமான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் குடிநீர் தொட்டிகளில் தற்போது பருவ மழைக்காலம் தொடங்கிய நிலையில் பொதுமக்களுக்கு நோய் தொற்று ஏற்படாதவாறும் மற்றும் Liquid குளோரினேஷன் இருப்பு இல்லாதக் காரணத்தாலும் நவம்பர் **2023** முதல் மார்ச் **2024** முடிய **29400** லிட்டர் Liquid குளோரின் பெறுவதற்கு மொத்தம் தொகை ரூ.**5,00,000 /–** ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண் : 3748 / 2023 /இ1</u>** | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 160 | பொருள்.33 ஜெயங்கொண்டம் நகராட்சியில் **21** வார்டு பொது மக்களுக்கு இந்நகராட்சியிலுள்ள **70** ஆழ்துளை கிணறுகள் மூலம் சீரான சுகாதாரமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது **70** அழ்துளை கிணறுகளில் பல்வேறு இடங்களில் மணல் சில்ட் ஏற்பட்டும், குழாயில் அடைப்பு ஏற்பட்டும், குடிநீர் கலங்களாகவும் வருவதால் அடைப்பு ஏற்பட்டுள்ள **8** எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகளை கண்டறிந்து கம்பரஸர் மூலம் ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்தும் மற்றும் இதர பழுதுகள் செய்தும், குடிநீர் பகிர்மான குழாய் பழுதும் உதிரிபாகங்கள் (குடிநீர் பைப்பு, பெயிண்ட், கப்ளிங் L,Tee, கேட் வால்வு )போன்ற சப்ளை செய்தும் பழுதுகளை உடனடியாக சீர் செய்யவும் ஆகும் தொகை ரூ.**3.50** இலட்சத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண் : 3751/ 2023 /இ1</u>** | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 161 | பொருள்34 ஜெயங்கொண்டம் நகராட்சியிலுள்ள வாரச்சந்தை, SBI காலணி, சின்னவளையம், சின்னவளையம் மாரியம்மன் கோவில், மணக்கரை, மணக்கரை பல்லர் தெரு, உபதேசியார் தெரு, மேலக்குடியிருப்பு, வடக்குத் தெரு, செங்குந்தபுரம் மெயின் ரோடு, செங்குந்தபுரம் **6**வது தெரு மற்றும் கரடிகுளம் ஆகிய **12** இடங்களில் பொருத்தப்பட்ட குளோரின் டோசிங் மையம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது பருவ மழைக்காலங்களில் தொடங்கிய நிலையில் பொதுமக்களுக்கு நோய் தொற்று ஏற்படாதவாறு முன்னொச்சரிக்கை நடவடிக்கையாக குடிநீரில் குளோரின் கலந்து குடிநீர் வழங்குவது அவசியம் என்பதால். குளோரினால் மின் மோட்டர்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் டேங்களுக்கு செல்லும் பைப்லைன்களில் ஏற்படும் பழுதுகளை நவம்பர் **2023** முதல் மார்ச் **2024** வரை காலத்திற்கு பழுது நீக்கவும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவின மதிப்பீட்டுத் தொகை ரூ.**2,50,000/–**ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்கலாம் |

| | | | |
|---|---|---|---|
| | | **<u>ந.க.எண் : 3748-1/ 2023 /இ1</u>** | |
| | 162 | பொருள்.35ஜெயங்கொண்டம் நகராட்சியில் வார்டு எண் 14 ல் உள்ள பேருந்து நிலையம் நுழைவு பாதையில் ஆபத்து காத்த விநாயகர் கோவில் (தென்புறம்) அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியானது கட்டப்பட்டு சுமார் 70 ஆண்டுகள் பழமையான கட்டிடம் ஆகும். இந்த கட்டிடம் 15 வருடங்களுக்கு மேலாக பயன்பாட்டில் இல்லை. தற்போது, இந்த கட்டிடத்தின் Basement மற்றும் பக்கவாட்டு சுவர்கள் மிகவும் சேதமடைந்துள்ளது. நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள பகுதி ஒரு நாளைக்கு சுமார் 100 பேருந்துகள் உள்ளே வந்து செல்வதால் அதிர்வுகள் ஏற்பட்டு மேற்படி கட்டிடம் பொதுமக்களுக்கு அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. மேலும், திரு.அ.சங்கர், இந்திய தேசிய காங்கிரஸ், அரியலூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அவர்கள் 25.09.2023 அன்று அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அளித்த புகார் மனுவின் மேற்படி கட்டிடத்தின் தனிக்கவனம் செலுத்தி உடன் கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை வைத்துள்ளார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க மேற்கண்ட இடத்தினை நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர் ஆகியோர்கள் ஆய்வு மேற்கொண்டு கட்டிடத்தின் உறுதி தன்மை மிகவும் மோசமானதாக உள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு மேற்கண்ட பயன்பாட்டில் இல்லாத பழுதான நீர்தேக்க தொட்டியினை உடனடியாக நகராட்சி இயந்திரங்களை கொண்டு இடித்து அப்புறப்படுத்த நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண் : 3747 / 2023 /இ1</u>** | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 163 | பொருள்.36 ஜெயங்கொண்டம் நகராட்சியில் வார்டு எண் 21 வேலாயுத நகர் 2வது தெருவில் உள்ள மழைநீர் வடிகால் வாய்க்கால் மண்ணில் புதைந்து சேதமடைந்த நிலையில் கழிவுநீர் வெளியேற வழியில்லாமல் அப்பகுதி பொதுமக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமாக உள்ளது. இப்பகுதியில் சுமார் 150 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். எனவே, தற்போது மழைகாலம் என்பதால் நோய் தொற்று ஏற்படும் சூழ்நிலையில் உள்ளதாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதி மக்களின் நலன் கருதி சேதமடைந்துள்ள மழைநீர் வடிகால் வாய்காலை சீரமைக்கும் பணிக்கு ரூ.9.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண் : 3975/ 2023 /இ1</u>** | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 164 | பொருள்.37 ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.05 மணக்கரை கீழதெருவில் சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அப்பகுதியில் ஏற்கனவே, சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பாக போடப்பட்ட ஆழ்துளை கிணறு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது மேற்படி ஆழ்துளை கிணற்றில் போதிய தண்ணீர் இல்லாமல், நீர் மட்டம் குறைந்ததால் போதி , அளவு நீரை உறிஞ்ச முடியவில்லை. எனவே, மேற்படி பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு தேவையான அளவிற்கு குடிநீர் வழங்க இயலவில்லை. மேற்கண்ட | மன்றம் அனுமதி வழங்கலாம் |

<table>
<tr><td></td><td></td><td>பகுதியில் 5000 லிட்டர் கொள்ளளவு உள்ள (HDPE) டேங்க் பொருத்தப்பட்டு நீர் நிரப்பி அவ்வப்போது பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. இனி வரும் காலங்களில் மேற்படி பகுதியில் குடிநீர் பிரச்சனையை ஏற்படதாவாறு அப்பகுதியில் நீர் ஊற்று இடத்தை கண்டறிந்து புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கவும், மின்மோட்டார் அமைக்கவும் ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண் : 3974/ 2023 /இ1</u></td><td></td></tr>
<tr><td></td><td>165</td><td>பொருள்.38 இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான 4 எண்ணிக்கை கொண்ட இலகுரக வாகனம் (LCV) கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.18275/2022/CFC-1 நாள்.21.03.2023–ன் படி 15வது நிதிக்குழு மானியம் 2022–2023 (Tied Grant)-ன் கீழ் ரூ.29.20 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட 4 எண்ணிக்கை வாகனங்களுக்கு போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்ய வாகனத்திற்கு வாகன காப்பீடு, வாகன பதிவுகட்டணம், Reflection Sticker, Number Plate, Yellow Painting போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.3.45 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண் : 3976/ 2023 /இ1</u></td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td></td><td>166</td><td>பொருள்.39 இந்நகராட்சியில் பொது சுகாதார பயன்பாட்டில் உள்ள கிட்டாச்சி (TMX-20 ) வாகனத்திற்கு கீழ்க்கண்டவாறு பேட்டரி கொள்முதல் பணிகள் மேற்கொள்ள 06.11.2023 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில், கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td rowspan="2">வ. எண்.</td><td>M/s. Veera Power Solutions Jayankondam</td><td>M/s. A1Batterys, Udaiyarpalayam</td><td>M/s.Vishwa Batterys,Udaiyarpalayam</td></tr>
<tr><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>6700 /-</td><td>7200/-</td><td>7700/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த M/s. Veera Power Solutions, ஜெயங்கொண்டம் நிறுவனத்தாரின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Veera Power Solutions, ஜெயங்கொண்டம் அவர்களது விலைப்புள்ளி ஏற்று நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.<br><u>ந.க.எண். 4089/2023/இ1</u></td><td>மன்றம் ஏற்கலாம்</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>167</td>
<td>பொருள்.40 இந்நகராட்சியில் பொது சுகாதார பயன்பாட்டில் உள்ள ஜே.சி.பி (TN-61 J 2094) வாகனத்திற்கு கீழ்க்கண்டவாறு பேட்டரி கொள்முதல் பணிகள் மேற்கொள்ள 06.11.2023 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில், கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td rowspan="2">வ. எண்.</td><td>M/s. Veera Power Solutions Jayankondam</td><td>M/s. A1Batterys,<br>Udaiyarpalayam</td><td>M/s.Vishwa Batterys,<br>Udaiyarpalayam</td></tr>
<tr><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>12,500 /-</td><td>14,000/-</td><td>14,600-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த M/s. Veera Power Solutions, ஜெயங்கொண்டம் நிறுவனத்தாரின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
3. பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Veera Power Solutions, ஜெயங்கொண்டம் அவர்களது விலைப்புள்ளி ஏற்று நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண். 4088-3/2023/இ1</u></td>
<td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td>
</tr>
<tr>
<td></td>
<td>168</td>
<td>பொருள்.41 மனுதாரர் திரு.ரா. பாஸ்கரன் த/பெ. ராமசாமி, காஞ்சிபுரம் அவர்கள் தனக்கு சொந்தமான அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்ட சோழபுரம் கிராமம் சர்வே எண். 324/11. 322/11.14,15,16,17,18,19,20,21,22,23,24,25, 26,27,28,29–ல் அமைந்துள்ள 1.795 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க இணையதளம் வாயிலாக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அரியலூர் அவர்களுக்கு விண்ணப்பித்ததை தொடர்ந்து மனுதாரரின் விண்ணப்பம் நகர் ஊரமைப்பு துறையால் சுூராய்வு செய்யப்பட்டு ந.க.எண். 855/2023/AD/1GLA7CQG/2023/TCP நாள் : 16.10.2023 தேதிய உத்தரவில் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ. /ந.ஊ.உ.இ (அ.மா) எண். 15/2023 என எண்ணிடப்பட்டுள்ளது.<br>
மேலும், அரசாணை எண்.18, ந..நி.ம.கு.வ.துறை நாள் : 04.02.2019ன் படி, மனைப்பிரிவு உரிமையாளர் சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சிக்கும், மின் வாரியத்திற்கும், நகர் ஊரமைப்பு துறை வாயிலாக ஒப்படைத்துள்ளார். அதன் அசல் நகலை இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.<br>
மனைப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் படி தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. தெரு விளக்கு வசதிக்காக மின்வாரியத்தில் மதிப்பீட்டுத் தொகை பெற்று ஆணையர் பெயரில் நேரடியாக செலுத்த மனைப்பிரிவு உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் வசதிகள், போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீடு மற்றும் வரைபடத்தின்படி</td>
<td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது குறித்தும், நகராட்சிப் பொறியாளரின் சான்று மற்றும் குறிப்பு பெறப்பட்டுள்ளது. நகராட்சிப் பொறியாளரின் மதிப்பீட்டின் படி ரூ.12.00 லட்சம் நகராட்சி கருவூலத்தில் மனைப்பிரிவு உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளது. இரசீது (பற்று சீட்டு எண்.0010720 நாள் : 03.11.2023) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு கூராய்வு கட்டணம் உள்ளிட்ட இதர கட்டணங்களை வசூலித்துக் கொண்டு மனைப்பிரிவு அங்கீகரித்து இறுதி உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண். 3591 /2023/எப்1</u>** | |
| | 169 | பொருள்.42 மனுதாரர் திரு.மு.பாரூக் த/பெ. முகமதுகனி, நெய்வேலி அவர்கள் தனக்கு சொந்தமான அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்ட சோழபுரம் கிராமம் சர்வே எண். 292/4B2 அமைந்துள்ள 2.02 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க இணையதளம் வாயிலாக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அரியலூர் அவர்களுக்கு விண்ணப்பித்ததை தொடர்ந்து மனுதாரரின் விண்ணப்பம் நகர் ஊரமைப்பு துறையால் கூராய்வு செய்யப்பட்டு ந.க.எண். 615/2022/AD/TCP நாள் : 29.12.2022 தேதிய உத்தரவில் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ. /ந.ஊ.உ.இ (அ.மா) எண். 14/2022 என எண்ணிடப்பட்டுள்ளது.<br>மேலும், அரசாணை எண்.18, ந..நி.ம.கு.வ.துறை நாள் : 04.02.2019ன் படி, மனைப்பிரிவு உரிமையாளர் சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சிக்கும், மின் வாரியத்திற்கும், நகர் ஊரமைப்பு துறை வாயிலாக ஒப்படைத்துள்ளார். அதன் அசல் நகலை இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.<br>மனைப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் படி மனுதாரரின் சொந்த பொறுப்பில் தார்சாலை மற்றும் குடிநீர் பகிமான குழாய் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தெரு விளக்கு வசதிக்காக மின் வாரியத்தில் ரூ. 1,25,080/–க்கு மதிப்பீடு தொகை பெறப்பட்டு நகராட்சி ஆணையர் பெயரில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சாலை மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்பட்டது குறித்து நகராட்சிப் பொறியாளரின் சான்று மற்றும் குறிப்பு பெறப்பட்டுள்ளது. மேலும் நகராட்சிப் பொறியாளரின் மதிப்பீட்டின் படி மழைநீர் வடிகால் கட்டமைப்புக்காக ரூ.1.50 லட்சமும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு கூராய்வு கட்டணம் உள்ளிட்ட இதர கட்டணங்களை வசூலித்துக் கொண்டு மனைப்பிரிவு அங்கீகரித்து இறுதி உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண். 062 /2023/எப்1</u>** | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 170 | பொருள்.43 மனுதாரர் திரு.எம்.பீட்டர்பால் த/பெ. மோசஸ் ஆண்டிமடம் என்பவர் ஜெயங்கொண்டம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரியலூர் மாவட்ட | மன்றம் அனுமதி வழங்கலாம் |

| | | | |
|---|---|---|---|
| | | **ஆட்சித்தலைவரிடம் விண்ணப்பித்ததின் பேரில் அரியலூர் மாவட்ட மாற்று திறனாளி நல அலுவலர், மனுதாரரின் விண்ணப்பத்தை திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிமிடெட் திருச்சி அதன் செயல் ஆட்சியர்/மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பியதன் பேரில் திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.** 12183/ALR/DAP/2021-2022 **நாள் :** 19.10.2023 **தேதிய உத்தரவில் திரு. எம். பீட்டர்பால் அவர்களை ஆவின் பாலக முகவராக நியமன ஆணை வழங்கியும், ஜெயங்கொண்டம் நகராட்சி புதிய பேருந்து நிலைய வடக்கு பகுதியில் உள்ள காலியிடத்தில் ஆவின் பாலகம் அமைத்திடவும் அரசாணை நிலை எண்.** 20 **மாற்று திறனாளிகள் நலத்துறை நாள் :** 11.07.2022**ன் படி வாடகை மற்றும் முன்பணம் செலுத்துவதில் விலக்கு அளித்து ஆணை வழங்கியுள்ளார்.**<br>**வருவாய் கோட்டாச்சியர், உடையார்பாளையம் அவர்களின் ந.க.எண்.** அ4/4898/2021 **நாள் :** 12.07.2023 **ம் தேதிய கடிதத்தில்ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தில் உள்ள காலியிடத்தில் மனுதாரர் திரு. பீட்டர்பால் தேனீர் கடை வைக்க அனுமதி அளித்துள்ளார்.**<br>**திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிமிடெட் திருச்சி அதன் செயல் ஆட்சியர்/மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு படி ஜெயங்கொண்டம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் வடக்குபுறம் சாலையோரம் உள்ள காலியிடத்தில் வாடகை மற்றும் முன்பணம் செலுத்தியதில் விலக்கு அளித்து** '10 x10' **அடி நீள அகலத்தில் இடம் ஒதுக்கீடு செய்யவும் நகராட்சிப் பொறியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் கருத்துரைப் பெற்று உரிய நிபந்தனைகளுடன் ஆவின் பாலகம் அமைத்திட அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>**மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**<u>ந.க.எண். 1701/2021/எப்1</u>** | |
| | 171 | பொருள்.44 நகராட்சி நிர்வாக இயக்குநரக உத்தரவுப்படி, ஜெயங்கொண்டம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலையோர வியாபாரிகளுக்காக, சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், **2014** (மத்திய சட்டம் எண்.**7/2014) 37**வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், **2015** மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், **2015–**ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் ஜெயங்கொண்டம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், **2019** ன் கீழ் கீழ்கண்டவாறு ஏற்படுத்திடவும் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் பொதுமக்களின் ஆட்சேபணை மற்றும் ஆலோசனை தெரிவிக்க கோரி விளம்பரம் செய்து அதன் அடிப்படையில் மாவட்ட அரசிதழில் துணை விதிகள் விபரத்தை வெளியிடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.**<br>**சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை** | மன்றம் அனுமதி வழங்கலாம் |

| | | | |
|---|---|---|---|
| | | **ஒழுங்குமுறை) துணை விதிகள், 2019**<br>**<u>அறிவிப்பு</u>**<br>சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015–ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் ஜெயங்கொண்டம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2019 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.<br>தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம், 1998 பிரிவு 199 ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குப்படுத்தவும், ஜெயங்கொண்டம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2019 ஏற்படுத்தப்படுகின்றது.<br>**அத்தியாயம்–1**<br>**முதனிலை**<br>1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.–** இந்த துணை விதிகள் ஜெயங்கொண்டம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2019 என்றழைக்கப்படும்.<br>(2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்<br>2. **பொருள் வரையறைகள்.–** இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,<br>**(i)** "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்;<br>**(ii)** "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்;<br>**(iii)** "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்;<br>**(iV)** "திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்;<br>**(V)** "நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்;<br>சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.<br>**அத்தியாயம்–2**<br>**விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்**<br>**3.(1)** பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் | |

அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலங்களை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து ஜெயங்கொண்டம் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிபார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iV) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(V) ஒரு சாலையில் விற்பனைஅனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(Vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

(Vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(Viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களிள்,

(i) அரசு கட்டிடங்கள், நீதிமன்றங்கள்நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்,

(ii) இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

(iV) பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து **50** மீட்டர் நீளத்திற்கு,

(V) பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், **2010**ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(Vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(Vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் **30** மீட்டர் நீளத்திற்கு

(Viii) 'எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும்

வாயிலிருந்து **30** மீட்டர் நீளத்திற்கு.

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு–** கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4. சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.–** எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iii) குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iV) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள், நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(V) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,

(Vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,

(Vii) நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,

(Viii) உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ

செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

**5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–** சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்,

(ii) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,

(iii) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்,

(iV) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.

(V) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்,

(Vi) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Vii) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Viii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(ix) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(x) தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும்

(xi) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம்–3

## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

**6. விற்பனை கட்டணம்,– (1)** சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) உப விதி (1)ன்படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின்படியாகும்.

| வ. எண். | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1800/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள்வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் – வருடத்திற்கு ரூ.3600/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் – வருடத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | ரூ.5400/—க்கு குறையாமல் |
| 2. | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் — வருடத்திற்கு ரூ.1000/—க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் — வருடத்திற்கு ரூ.1800/—க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் — வருடத்திற்கு ரூ.2800/—க்கு குறையாமல் |
| 3. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1800/— |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.3600/— |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.5400/— |
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1000/— |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1800/— |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.2800/— |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | — | வருடத்திற்கு ரூ.500/— |

(3) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்படும்.

**7. பராமரிப்பு கட்டணம்,—** (1) சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு 100/—க்கு குறையாமலும், ரூ. 300/—க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

(3) பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும்.

**8. அபராதம் விதித்தல்,—** எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

(i) விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது,

மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனைபாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

**அத்தியாயம்– 4**

**பலவகை**

**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.– (1)** நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குபடுத்துதல்.–** எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

**11. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குப்படுத்துதல்,– (1)** விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.

(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.

(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோக படுத்தல் வேண்டும்.

(4) விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது.

(5) மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | **<u>ந.க.எண்.1502/2014/எப்.1</u>** | |
| | 172 | பொருள்.45 மனுதாரர் சா.தினேஷ் (HITACHI PVT LTD.,) த/பெ.சாமிநாதன், தாதம்பேட்டை என்பவர் ஜெயங்கொண்டம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் ATM வைக்க அனுமதி கோரியுள்ளார். இடம் பார்வையிடப்பட்டது. புதிய பேருந்து நிலையத்தில் உள்ள புதிய பேருந்து நிறுத்த கட்டிடத்தின் வட பகுதியில் உள்ள காலியிடத்தில் 6' x 6' என்கிற அளவில் இடம் ஒதுக்கீடு செய்யவும், வருவாய் ஆய்வாளரின் ஒப்புதல் மற்றும் நகராட்சிப் பொறியாளரின் இட வாடகை நிர்ணயம் குறித்து அறிக்கைப் பெற்று தற்காலிக ATM வைத்துக்கொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><u>ந.க.எண்.3477/2023/எப்.1</u> | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 173 | பொருள்.46 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள் , துணை மேயர்கள், மன்றத்தலைவர்கள், மன்றத்துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் மதிப்பூதியம் உயர்த்தி வரப்பெற்ற அரசாணை (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண்.98 நாள்.13.07.2023)மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்<br>தலைவர் — ரூ.15,000<br>துணைத்தலைவர் — ரூ.10,000<br>நகர்மன்ற உறுப்பினர்கள் — ரூ.5,000<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2241/2023/சி1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

**ஆணையர்,**
**ஜெயங்கொண்டம் நகராட்சி.**